ஸ்ரீ:

# ஆசார்யர்கள் அருளிச்செய்த பட்டோலை

குறிப்புகள் எழுதியவர்:

ஸ்ரீ.உ.வே. P.B.K. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீராமாநுஜமிஷன் கௌரவ பொதுச்செயலாளர்,

ஸ்ரீ.உ.வே.குவளகுடி சிங்கமய்யங்கார் பாடசாலை ஆசிரியர், ஸ்ரீரங்கம், திருச்சி - 6.

**குறிப்பு முன்னுரை:**

''ஆசார்யர்கள் அருளிச்செய்த பட்டோலை'' என்னும் நூல் திருநாங்கூர் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீவைகுந்த விண்ணகரம் திருமாளிகையிலுள்ள ரஹஸ்ய க்ரந்த ஓலைச்சுவடியில் உள்ளது. பெரியபெருமாள் தொடங்கி சமீபகாலம் 200,300 வருஷங்களுக்கு முன் வரையுள்ள ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் அருளிச்செய்துள்ள கிரந்தங்களின் அட்டவணை வடிவில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலில் சேராத மற்றும் சில பல நூல்களும் இருக்கவேசெய்யும். சிறப்பாகச் சில இதில் குறிக்கப் பட்டுள்ளன. உதாஹரணமாகப் ''பெரியபெருமாள் ஸ்ரீஸைலேசதயாபாத்ரம் அருளிச் செய்தார்'' ''நம்மாழ்வார் அண்டகோளம் என்ற அகவல் அருளிச்செய்தார்'' என்பதை எடுத்துக்கொள்ளலாம். நம்மாழ்வார் அண்டகோளம் என்ற அகவல் அருளிச்செய்தார் என்பதில் அபிப்ராயபேதம் உள்ளது. அது மற்றொரு விஷயம். தனியாக விமர்சிக்கவேண்டியது. அனேகமாகப் பெரும்பாலும் ஆசார்யர்களின் பௌர்வாபர்ய க்ரமத்திலேயே (முன்பின் வரிசைக் கிரமப்படியே) நூல் அமைந்துள்ளது. ஸ்ரீவைஷ்ணவ உலகில் இம்மாதிரி நூல்களின் அட்டவணை ஒன்று தயாரிக்கவேணும் என்ற எண்ண மிருந்தபோது, தற்செயலாக இந்த ஓலைச்சுவடியைப் பார்க்க நேரிட்டது. இந்த நூல் பூர்த்தியாக இல்லை. மேலும் இப்போது வரை வெளிவந்துள்ள நூல்களையும் சேர்த்துக்கொள்ளலாம். ஸ்ரீவைஷ்ணவ உலகில் இன்றுவரை வெளிவராத பல நூல்களின் பெயர்களும் இதில் வந்துள்ளன. அவைகளை ஆராய்ந்து கண்டுபிடித்து வெளியிடவும் ஒரு தூண்டுகோலாக இந்நூல் உபயோகப்படும் - இந்த நோக்கத்திலேயே இது வெளியிட உத்தேசிக்கப் பட்டது. ஒருவர் அருளிச்செய்ததை மற்றொருவர் அருளிச்செய்ததாகவும் இதில் சில பகுதிகள் உள்ளன. அவைகளை ஆராய வேண்டும். குறிப்புக்கள் ப்ராக்கெட்டுக்குள் உள்ளன. குற்றம் களைந்து நல்லதைக் கொள்ள வேணுமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**<u>நூல் தொடக்கம்</u>:**

1. பெரியபெருமாள் ஸ்ரீசைலேசதயாபாத்ரம் அருளிச்செய்தார். *(வேதாதி ஸகல சாஸ்திர ப்ரவர்த்தகனான எம்பெருமான் பெரிய பெருமாளாகிய அர்ச்சாரூபியானபோது இதை அருளினார் என்கை.)*

2. பேரருளாளன் ஆறு வார்த்தை அருளிச்செய்தார்.

3. திருமழிசையாழ்வார் ஷண்மதத்துக்கும் க்ரந்தம் பண்ணினார். *(இவர் பல சமயங்களிலும் புக்குக் கடைசியில் பேயாழ்வாரால் திருத்திப் பணிகொள்ளப்பட்டார். அவ்வப்போது அந்தந்த மதங்களில் கிரந்தங்கள் பண்ணியிருக்கலாம். ஸ்ரீவைஷ்ணவத்தில் நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் அருளிச்செய்தார்.)*

4. பெரியாழ்வார் கல்பஸூத்ர வ்யாக்யானம் பண்ணினார். *(திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி அருளிச்செய்தார்.)*

5. குலசேகரப்பெருமாள் முகுந்தமாலை அருளிச்செய்தார். *(பெருமாள் திருமொழி அருளிச்செய்தார். முகுந்தமாலை அருளிச்செய்த விஷயத்தில் அபிப்ராயபேதம் இருக்கிறது.)*

6. திருமங்கையாழ்வார் பரசமயகண்டனம் பண்ணினார். *(பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரியதிருமடல், திருநெடுந்தாண்டகம் அருளிச்செய்தார்.)*

7. நம்மாழ்வார் அண்டகோளம் என்ற அகவல் அருளிச்செய்தார். *(திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி அருளிச்செய்தார். இவர் ப்ரபந்நஜனகூடஸ்தர்.)*

8. மதுரகவி கண்ணிநுண்சிறுத்தாம்பு அருளிச்செய்தார். *(இங்கு மற்ற ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களையும் குறித்துக் கொள்ளவேணும். பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி, பூதத்தாழ்வார் இரண்டாம்*

திருவந்தாதி, பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதி, ஆண்டாள் திருப்பாவை நாச்சியார் திருமொழி; தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி; திருப்பாணாழ்வார் அமலனாதிபிரான் அருளிச் செய்துள்ளனர்.)

9. நாதமுனிகள் ந்யாஸதத்த்வம் என்கிற ஸூத்ரமும், யோக ரஹஸ்யமும் அருளிச்செய்தார். (ந்யாயதத்வம் என்கிற நூலும் நாதமுனிகள் அருளிச் செய்தது. அதன் பல பகுதிகள் ஸ்ரீவேதாந்த தேசிகரால் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. ஸ்ரீபாஷ்யத்திலும் சில ந்யாயதத்த்வ ஶ்லோகங்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. ந்யாஸதத்த்வம் ஸூத்ரரூபமான க்ரந்தம் என்று இந்நூலால் தெரியவருகிறது. நம்மாழ்வார் மூலமாக ப்ரபத்தி மார்க்கத்தைப்பெற்றுப் பிரவர்த்தித்தவரானபடியால் ந்யாஸதத்த்வம் என்ற நூல் அருளிச்செய்திருக்கலாமென்பதில் ஔசித்யமுள்ளது. நாதமுனிகள் கிரந்தமொன்றும் இன்றுவரை பூர்ணமாகக் கிடைக்கவில்லை.)

10. ஆளவந்தார் ஆகமப்ராமாண்யம், மஹாபுருஷ நிர்ணயம், ஸித்தித்ரயம், கீதார்த்த ஸங்க்ரஹம், சது:ச்லோகீ, ஸ்தோத்ரரத்னம் அருளிச்செய்தார்.

11. திருக்கச்சிநம்பி வரதராஜாஷ்டகம் அருளிச்செய்தார்.

12. திருக்கோட்டியூர் நம்பி ப்ரமேயஸாரம், பத்துவார்த்தை அருளிச் செய்தார்.

13. பெரியநம்பி ஸ்ரீவைஷ்ணவ தினசரிதம் அருளிச்செய்தார். (நூற்றெட்டுத் திருப்பதி விஷயமாகவும் நூல் அருளிச்செய்ததாக செவிவழிச் செய்தி. பெரியதிருமலைநம்பிகள் எம்பெருமானாரது மாதுலர் (அம்மான்) ஸ்வாசார்ய நியமனத்தால் எம்பெருமானாருக்கு ஸ்ரீராமாயணார்த்தம் உபதேசித்தார். அவர் அருளிச்செய்ததாகப் ''பெரியதிருமலை நம்பிகள் அருளிச்செய்த ஸ்ரீராமாயண ஸ்வாபதே₃ஶ வ்யாக்₂யாநம்'' என்ற நூல்

திருநாங்கூர் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீவைகுந்த விண்ணகரம் திருமாளிகை யிலுள்ள பழைய கையெழுத்து பிரதியொன்றை அடியேன் சென்னை தங்க சாலையிலுள்ள ஸ்ரீராமர் கோவில் ஜீர்ணோத்தாரணக் கமிட்டியார் வெளியிட்ட மலரில் அச்சிட்டு வெளியிட்டுள்ளேன்.)

14. எம்பெருமானார் வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், வேதார்த்த ஸங்க்₃ரஹம், ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், கத்யத்ரயம், நித்யம், பத்மாஸனோபவிஷ்டம் இத்யாதி ஶ்லோகத்வயமும் அருளிச் செய்தார். (பெரியதிருமொழிக்கு வாழிபரகாலன் என்ற தனியனும், பெரியதிருவந்தாதிக்கு முந்துற்ற நெஞ்சே, என்ற தனியனும் அருளிச் செய்தார்.)

15. திருக்குருகைப்பிரான் பிள்ளான், நயப்ரகாசிகை (ந்யாயப்ரகாஶிகை?) ஆறாயிரப்படி முதல் அருளிச்செய்துள்ளார்.

16. கூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவம், அதிமாநுஷ ஸ்தவம், ஸுந்தரபாஹுஸ்தவம், வரதராஜஸ்தவம், ஸ்ரீஸ்தவம் யமகரத்னாகரம், தத்₃வ்யாக்₂யானம், நித்யம், லக்ஷ்மீநாத, யோநித்ய மச்யுத, குருபரம்பரையும் அருளிச்செய்தார். (குருபரம்பரை - வாக்ய குருபரம்பரை, யமகரத்னாகரம் ஆழ்வான் அருளிச்செய்தார் என்ற விஷயத்தில் அபிப்ராயபேதம் உள்ளது.)

17. அருளாளப்பெருமாள் எம்பெருமானார் ஞானஸாரம் ப்ரமேயஸாரம் அருளிச்செய்தார்.

18. கோவிந்த ஜீயர் யதித₄ர்மஸமுச்சயம் அருளிச்செய்தார். (இவர் முன்பு யாத₃வப்ரகாஶன் என்கிற பெயருள்ளவராய் அத்₃வைத ஸந்யாஸியா யிருந்தார். இவரிடந்தான் எம்பெருமானார் பூர்வாஶ்ரமத்தில் அத்வைதம் பயின்றார். பிறகு, எம்பெருமானாரிடம் இந்த யாதவப்ரகாஶன் ஆஶ்ரயித்து கோவிந்தஜீயர் எனப் பெயர்பெற்றார்.)

19. எம்பார் - சரமகு$_3$ருவிஷயம். ஸ்ரீஶவிஷ்ஞாபனஸப்ததி ரஹஸ்யம் முதலானவை அருளிச்செய்தார்.

20. வங்கிபுரத்துநம்பி - நித்யம், திருப்பதிக்கோர்வை முதல் அருளிச்செய்தார்.

21. பட்டர் - அஷ்டஶ்லோகீ, ஸ்ரீரங்கராஜஸ்தவம், ஸ்ரீகுணரத்னகோசம், க்ரியாதீ$_3$பம், ஶ்லோகத்ரயம், ஸஹஸ்ரநாமபாஷ்யம், குருப்ரபாவ தீபிகை, சரமப்ரமாணம் முதல் அருளிச்செய்தார். *(இவரால் பல திருமஞ்சனக்கட்டியங்களும் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை ஸ்ரீரங்கத்தில் நம்பெருமாள் திருமஞ்சனத்தின்போது பட்டர் ஸந்ததியார் ஸேவிக்கக் கேட்கலாம்.)*

22. ஸ்ரீராமப்பிள்ளை ஆர்த்தி முதலானவை அருளிச்செய்தார்.

23. அவர் குமாரர் பராஶரபட்டர் - க்ஷமாஷோட$_3$ஶீ அருளிச்செய்தார்.

24. அவர் குமாரர் வேதவ்யாஸபட்டர் ஶ்ருதப்ரகாஶிகை, ஶ்ருத ப்ரதீ$_3$பிகை, வேதா$_3$ர்த்த ஸங்க்$_3$ரஹ வ்யாக்$_2$யாநம், ஸுபா$_3$லோப நிஷத்$_3$ வ்யாக்$_2$யாநம், ஶுகபக்ஷீயம், க$_3$த்$_3$யவ்யாக்$_2$யாநமும் அருளிச்செய்தார்.

25. அவர் குமாரரான நடுவில்திருவீதிபட்டர் பிஷ்டபஶு நிர்ணயம், அஷ்டாக்ஷரதீ$_3$பிகை, ரஹஸ்யத்ரயம், த்$_3$வயபீடக்கட்டு, தத்த்வ விவரணம், ஸ்ரீவத்ஸவிம்ஶதி முதலானவை அருளிச்செய்தார்.

26. முதலியாண்டான் ரஹஸ்யத்ரயமும், அஸ்மத்குரு தனியன் முதல் அருளிச்செய்தார்.

27. அவர் குமாரர் கந்தாடையாண்டான் விஜ்ஞாபநஸ்துதி முதலானவை அருளிச்செய்தார்.

28. பட்டர் திருவடிகளிலே ஆஶ்ரயித்த ஸ்ரீரங்கநாராயணஜீயர், உபநிஷத்3 வ்யாக்2யாநம், ஸ்தோத்ர வ்யாக்2யாநம் அருளிச்செய்தார். (இவர் அருளிய உபநிஷத் வ்யாக்2யாநப் பகுதிகள் ஈட்டின் ப்ரமாணத்திரட்டில் எடுக்கப்பட்டுள்ளன. ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸ்ரீஸூக்தபா4ஷ்ய கர்த்தாவாக எடுக்கப்பட்ட பெரிய ஜீயர் இவரே. ஸுத3ர்ஶந ஶதகம் அருளிய கூரநாராயணஜீயர் இவரே.)

29. நஞ்ஜீயர் திருவாய்மொழி வ்யாக்2யாநம் ஒன்பதினாயிரப்படி, திருமொழி வ்யாக்2யாநம் ஒன்பதினாயிரப்படி, திருப்பாவை வ்யாக்2யாநம் ஈராயிரப்படி, திருவந்தாதிகளுக்கு வ்யாக்யாநாந்தரம், கண்ணி வ்யாக்யா, திருப்பல்லாண்டுரை, ரஹஸ்யத்ரயம், ஶரணாக3தி க3த்3ய வ்யாக்2யா, நித்யம், வேதா3ர்த்த2ஸாரம், பரமார்த்த2விவேகம், சரமகு3ருரஹஸ்யமும் அருளிச்செய்தார். (இக் கிரந்தங்களில் சிலவே கிடைக்கின்றன. கிடைக்காதவைகளை கிடைக்குமா என மேலும் ஆராயவேண்டும்.)

30. ஸ்ரீஸேநாபதிஜீயர் சுத்தஸம்ப்ரதாயரத்னம், எழில்புதுவைமாலை முதல் அருளிச்செய்தார். (முமுக்ஷுப்படி மூலம் 41, அதன் வ்யாக்2யாநங்களில் இவருடைய வார்த்தை எடுக்கப்பட்டுள்ளது. ந்யாயகலாபஸங்க்ரஹம் இவர் அருளியது அச்சில் வந்துள்ளது.)

31. திருவரங்கத்தமுதனார் இராமாநுசநூற்றந்தாதி, திருப்பாவை ஈராயிரப்படி, திருப்பதிக்கோர்வை, எம்பெருமானார் தாலாட்டு முதல் அருளிச்செய்தார். (இராமாநுசநூற்றந்தாதியே கிடைக்கிறது. மற்றவை கிடைக்கவில்லை. அமுதனார் திருமாளிகையில் ஓலைச்சுவடிகளில் கிடைத்தாலும் கிடைக்கலாம். முயற்சி செய்யவேண்டும். அமுதனாரால் திருமஞ்சனக் கட்டியங்களும் தமிழில் சில பாக்களும் அருளப்பட்டிருக்கின்றன. அமுதனார் வம்சத்தவர்களிடம் இவைகள் உள்ளன.)

32. ஸோமாசியாண்டான் சரமோபாய விவரணம், கு₃ருகு₃ணாவலி, கு₃ருகு₃ண விவரணம், ஷடர்த்த₂ஸங்க்ஷேபம், நயத்₃யுமணி தீ₃பிகை அருளிச்செய்தார். *(எம்பெருமானாரின் சிஷ்யராய் ஸ்ரீப₄ாஷ்யத்திற்கு 'ஸ்ரீப₄ாஷ்யவிவரணம்' என்னும் முதல் வ்யாக்₂யாநமருளியவர் இவரே. இந்த ஸோமயாஜியாண்டானின் திருநாமம் 'ராமமிஸ்ரர்' என்பது.)*

33. எங்களாழ்வான் ஸாரார்த்த₂சதுஷ்டய விவரணமும் ஸ்ரீவிஷ்ணு சித்தீயமும் அருளிச்செய்தார். *(ஸ்ரீவிஷ்ணுசித்தீயம் - ஸ்ரீவிஷ்ணு புராண வ்யாக்₂யாநம், ஸாரார்த்த சதுஷ்டயம் வார்த்தாமாலையில் உள்ளது.)*

34. நம்பிள்ளை தனிப்ரணவம், திருவிருத்தஈடு, கண்ணிஈடு, கத்₃யத்ரய வ்யாக்₂யா, ரஹஸ்யத்ரம், திருப்பல்லாண்டுஈடு முதல் அருளிச் செய்தார்.

35. அம்மாள் சரமோபாயஸங்க்₃ரஹம், ஸ்ரீப₄ாஷ்யோபந்யாஸம், உபோத்₃க₄ாதம், ப்ரமேயமாலை, தத்த்வஸாரம், யதிராஜவிஜய ப₃ாணம், த₄ாடீபஞ்சகம், ஸாரார்த்த₂ஸங்க்₃ரஹம், ஶ்லோகத்₃வயம், பரத்வாதி₃பஞ்சகமும் ரஹஸ்யமும் அருளிச்செய்தார். *(அம்மாள் - நடாதூரம்மாள், த₄ாடீபஞ்சகம் கூரத்தாழ்வான் அருளியது எனவும் கூறுவர்.)*

36. வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவாய்மொழி ஈடுமுப்பத்தாறாயிரம், ஆசார்யஸம்மதி முதல் அருளிச்செய்தார்.

37. பெரியவாச்சான்பிள்ளை திருவாய்மொழிக்கு இருபத்து நாலாயிரப்படி, மூவாயிரத்துக்கு வ்யாக்₂யா, பரந்தரஹஸ்யம், ஸ்தோத்ர வ்யாக்₂யா, க₃த்₃ய வ்யாக்₂யா, பெருமாள் அப₄யப்ரத₃ான வ்யாக்₂யா, பிராட்டி அப₄யப்ரத₃ான வ்யாக்₂யா, மாணிக்கமாலை, நிக₃மநப்படி, தி₃வ்ய ப்ரப₃ந்த₄ாநுஸந்த₄ாநரஹஸ்யம், உபகாரரத்நம், ரஹஸ்யத்ரயம், தத்த்வத்ரயம், ஸகலப்ரமாணதாத்பர்யம், உப₄யவிவரணம், நவரத்ன

மாலை, ப்ரமேயஸாரம், தத்த்வ்யாக்யாநம், சது:ஶ்லோகீ வ்யாக்யா, ஶ்லோகத்வயம், ஏகஶ்லோகீ, தனிஶ்லோகீ, ஸங்க்ரஹப்படி, ஶரீரோத்பத்த்யநுஸந்தாநம், விவேகம், ஜிதந்தா வ்யாக்யாநம், திருக்குருகூர்ரத்னம், 'ராமம்மே'க்கு ஸம்ஸ்க்ருதடீகை, இருபத்து நாலாயிரப்படிக்கு உபந்யாஸம், ஸாமக்ரீபரம்பராநாசம், ஶாரீரகை கண்ட்யம், ஸ்ரீரங்கராஜஸ்தவ உரை, தத்த்வவிவேகம் முதலானவை அருளிச்செய்தார். *(சது:ஶ்லோகீ வ்யாக்யானம் பெரியவாச்சான் பிள்ளை சிறியதாகவும் அவர் குமாரர் நாயனாராச்சான்பிள்ளை விரிவாகவும் அருளிச்செய்தனர். )*

38. அவருக்கு தத்தகுமாரரான நாயனாராச்சான்பிள்ளை, ரஹஸ்யத்ரயம், தத்த்வவிவரணம், முக்தபோகாவலீ, அணுத்வ புருஷகாரத்வ ஸமர்த்தனமான தத்த்வஸங்க்ரஹம், அஷ்டாதஶ ஸம்வாதம், கைவல்ய நிர்ணயம், ஜ்ஞாநார்ணவம், சரமோபாய நிர்ணயம், பிஷ்ட பஶுநிர்ணயம் முதலானவை அருளிச்செய்தார்.

39. அவர் சிஷ்யரான வாதிகேஸரி அழகியமணவாள ஜீயர் திருவாய் மொழிக்குப் பன்னீராயிரப்படி, திருவிருத்தஸ்வாபதேஶம், திருவாய் மொழிக்கு ஶ்லோகரூபஸங்கதி, தத்த்வதீபம், தீபப்ரகாஶிகை, தத்த்வதீபஸங்க்ரஹம், தத்த்வநிரூபணம், ரஹஸ்யாம்ருதம், ரஹஸ்யத்ரயவிவரணம், அத்யாத்மசிந்தை, விவரணமாலை, தத்த்வஸங்க்ரஹ ஸாரார்த்தம், ரஹஸ்யத்ரயத்துக்கு ஶ்லோகரூப விவரணம், தத்த்வபூஷணம், ப்ரதிஶ்லோகம் மணிப்ரவாள வ்யாக்யாநமான கீதாஸாரம், இருபத்துநாலாயிரப்படிக்குப் ப்ரமாணத்திரட்டு, ரஹஸ்யத்ரயார்த்தசிந்தனம், ஶடகோபத்வயம் ராமாநுஜ த்வயங்களுக்கு வ்யாக்யாநம், உபதேஶமாலை, முஸலகிஸலயம், சரமகுருசரிதை முதலானவை அருளிச்செய்தார்.

40. அவர் சிஷ்யர் உத்பராஹஶ்ரமணீயர், உபதேஶமாலை வ்யாக்யா அருளிச்செய்தார்.

41. அவர் குமாரரான பரகாலநல்லான் பரகாலநல்லான் ரஹஸ்யத்ரயம், மைவண்ணநறுங்குஞ்சி வ்யாக்2யா அருளிச்செய்தார். *(பட்டர் அருளியதாக வழங்கும் மைவண்ண நறுங்குஞ்சி வ்யாக்2யா இவர் அருளியதே என ஷோட3ஶாத்4யாயியில் ஸுத3ர்ஶந ஸ்தா2பக ஸ்வாமி நிர்ணயித்தது இதனால் வலியுறுத்தப்படுகிறது.)*

42. வாதிகேஸரி சிஷ்யரான திருமாலையாண்டான் ரஹஸ்யத்ரயஸாரம், ப்ரமேயரத்னம் அருளிச்செய்தார்.

43. நம்பிள்ளை சிஷ்யரான பின்பழகிய பெருமாள் ஜீயர், குருபரம்பரா ப்ரபாவம் மூவாயிரப்படி அருளிச்செய்தார். *(ஆறாயிரப்படி என ப்ரஸித்தி.)*

44. பிள்ளைலோகாசார்யர், அஷ்டாதச ரஹஸ்யம் அருளிச்செய்தார். இன்னமும் ஸம்ஸ்க்ருத தத்த்வவிவேகம், கத்யவ்யாக்யான சிறுபடி, பெரியபடி, நாலுவார்த்தை, அவஸ்தாத்ரயமும் அருளிச்செய்தார். அஷ்டாதச ரஹஸ்யத்துக்கும் அடிவரவு - **முமுக்ஷ்வாதி3 தந்யாதி3 தத்வாதி3 ஸாதீ3ந் சதுஸ்த்ரித்3விஸங்க்2யாஸமேதாந் க்ரமேண । ப்ராதீ3ந் நவாதீ3ந் ஶ்ரியாதீ3ந் ததா2தீ3ந் ஜகு3: க்ருஷ்ண புத்ரப்ரணீதாந் ப்ரப3ந்தா4ந் ॥** *(அஷ்டாதசரஹஸ்யமாவது - 1.முமுக்ஷுப்படி, 2.ஶ்ரிய:பதிப்படி, 3.பரந்தபடி, 4.யாத்ருச்சிகப்படி, 5. தனித்திருமந்த்ரம், 6.தனித்வயம், 7.தனிசரமம், 8. தத்த்வத்ரயம், 9. தத்த்வஶேக2ரம், 10. ஸம்ஸார ஸாம்ராஜ்யம், 11. ஸாரஸங்க்3ரஹம், 12. ப்ரபந்நபரித்ராணம், 13. ப்ரமேயஶேக2ரம், 14. நவரத்னமாலை, 15.நவவித4ஸம்ப3ந்த4ம், 16. ஶ்ரீவசநபூ4ஷணம், 17. அர்ச்சிராதி3, 18.அர்த்தபஞ்சகம். (ஸம்ஸ்க்ருத தத்த்வ விவேகம் முதலியவை கிடைக்கவில்லை. ஆராயவேண்டும்.)*

45. அவர் திருத்தம்பியார் அழகியமணவாளப்பெருமாள் நாயனார், திருப்பாவை ஆறாயிரப்படி, திருப்பல்லாண்டு வ்யாக்2யாநம், திருவிருத்தம் ஆறாயிரப்படி, ஆசார்யஹ்ருதயம், அருளிச்செயல் ரஹஸ்யத்ரயம், சரணாகதிமாலை, ஆசார்ய ஹ்ருதயப் பட்டோலையும்

அருளிச்செய்தார். *(ஆசார்யஹ்ருதய பட்டோலை என்பது எது என்பதை ஆராயவேண்டும். ஆசார்யஹ்ருதயத்தில் தான் உதாஹரித்த மேற்கோள்கள் இன்னார் இன்னார் அருளிச்செய்த இன்ன இன்ன க்ரந்தங்களிலுள்ளவை என்பதைக் குறித்திருக்கலாம்.)*

46. கூரகுலோத்தமதாஸர் ஸ்ரீவசநபூஷணஸங்கதி முதலானவை அருளிச்செய்தார்.

47. நாலூராச்சான்பிள்ளை திருமொழிக்கும் பெரியாழ்வார் திருமொழிக்கும் உரை அருளிச்செய்தார்.

48. திருப்புட்குழி ஜீயர் உபதேசமாலை அருளிச்செய்தார்.

49. திருவாய்மொழிப்பிள்ளை பெரியாழ்வார் திருமொழி ஸ்வாபதேசம், வ்யாப்திரஹஸ்யம், சரணப்ரமாண ஸாரஸங்க்ரஹம் அருளிச் செய்தார். *(சரமப்ரமாண ஸாரஸங்க்ரஹம் என்றிருக்கலாம்.)*

50. பெரியஜீயர் பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யாநம், நூற்றந்தாதி வ்யாக்யாநம், ரஹஸ்யத்ரய வ்யாக்யாநம், தத்த்வத்ரய வ்யாக்யாநம், ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாநம், ஆசார்யஹ்ருதய வ்யாக்யாநம், யதிராஜவிம்சதி, உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி, ஈட்டுப்ரமாணத்திரட்டு, தத்வத்ரயப்ரமாணத்திரட்டு, பல திருநாமங்கள், திருவாராதனக்ரமம், 'நாதம் பங்கஜ...' 'திருவருள் மால்...' என்கிற தனியன் **''லோக குரும் குருபி:''** இவை முதலானவை அருளிச்செய்தார். *(பெரியஜீயர் - மணவாள மாமுனிகள்)*

51. மேல்நாட்டாயி தத்த்வத்ரய வ்யாக்யா, ரஹஸ்யத்ரய வ்யாக்யா, ஸ்ரீவசநபூஷண வ்யாக்யா, ஆசார்யஹ்ருதய வ்யாக்யா முதலானவை அருளிச்செய்தார். *(ஆயி-ஜநந்யாசார்யர், நாலூராச்சான்பிள்ளையிடம் இவரும், திருவாய்மொழிப்பிள்ளையும் ஈடுமுப்பத்தாறாயிரப்படி காலக்ஷேபம் கேட்டனர்.)*

52. பெரியபட்டர்பிரான் ஜீயர், அந்திமோபாய நிஷ்டை$_2$ முதலானவை அருளிச்செய்தார்.

53. திருநாராயணபுரத்தில் ஸ்ரீக்ருஷ்ணகுமாரர் ஆசார்யர்கள் வார்த்தாமாலை அருளிச்செய்தார். *(இந்த ஸ்ரீக்ருஷ்ணகுமாரர் என்பவர் யார் என விமர்சிக்கவேண்டும்.)*

54. அப்புள்ளார் காலப்ரகாஶிகை முதலானவை அருளிச்செய்தார்.

55. நாலூராச்சான்பிள்ளை திருமொழி வ்யாக்$_2$யாநம் அருளிச்செய்தார். *(47ம் எண்ணில் குறிக்கப்பட்டவரும் இவரும் ஒருவரா? வேறா? என விமர்சிக்கவேணும்)*

56. அழகியமணவாளப்பெருமாள் நாயனார் குமாரர் க்ருஷ்ணாசார்யர் விரோதி$_4$பரிஹாரம், கு$_3$ருபரம்பராப்ரப$_4$ாவம் முதலானவை அருளிச் செய்தார். அவருக்குத் திருவாய்மொழி ஆசார்யர் என்றும் திருநாமம். *(இந்த அழகியமணவாளப்பெருமாள் நாயனார் பிள்ளைலோகாசார்யர் திருத் தம்பியாரிலும் வேறானவர். அவர் பரமவிரக்தராய் நைஷ்டி$_2$கப்$_3$ரஹ்ம சாரியாகவே எழுந்தருளியிருந்தார் எனப் பிரஸித்தி. நாயனாராச்சான் பிள்ளையின் திருநாமம் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் என்பதே. ஆகையால் அவர் குமாரர் பாட்டனாரான பெரியவாச்சான்பிள்ளையின் திருநாமமான க்ருஷ்ணாசார்யர் என்னும் பெயரைப் பெற்றிருக்கலாம்.)*

57. பின்பழகியநயினார் நாயன், விஸ்தாரமாக கு$_3$ருபரம்பராப்ரப$_4$ாவம் அருளிச்செய்தார்.

58. பெரியபட்டர்பிரான் ஜீயர் திருவடிகளில் ஆஶ்ரயித்த அழகியமணவாள தா$_3$ஸர் நாயன், கு$_3$ருபரம்பராப்ரப$_4$ாவம் மூவாயிரப்படி அருளிச் செய்தார்.

59. ஆத்தான் எம்பெருமானார், உபதே$_3$ஶமாலை வ்யாக்$_2$யா அருளிச் செய்தார்.

60. எறும்பியப்பா ஜீயர் விஷயமாக பூர்வோத்தர தி₃நசரி, திருப்பள்ளி யுணர்த்தல், வரவரமுநி ஶதகம், வரவரமுநிகாவ்யம், சரமோபாய தாத்பர்யம், சரமகு₃ருநிர்ணயம், ஸந்மார்க்கத₃ர்ப்பணம், விலக்ஷண மோக்ஷாதி₄காரம் முதலானவை அருளிச்செய்தார்.

61. அப்பிள்ளை ஐந்து திருவந்தாதிக்கும் உரை, யதிராஜவிம்ஶதி வ்யாக்₂யாநம், பெரியாழ்வார் திருமொழி உரை, பெரியபெருமாள் முதல் வாழித்திருநாமமும் அருளிச்செய்தார்.

62. ப்ரதிவாதி₃ப₄யங்கரம் அண்ணா பெரியபெருமாள் முதல் நம்மாழ்வார் அளவாக ப்ரபத்தி மங்க₃ளாஶாஸநம் அருளிச்செய்தார். *(இவர், மேலும் வரவரமுநி ஶதகம், அஷ்டஶ்லோகிக்கு ஸம்ஸ்க்ருத வ்யாக்₂யாநம், 108 திவ்யதேஶ எம்பெருமான்களுக்கும் ஸுப்ரப₄ாதம் ப்ரபத்தி மங்களா-ஶாஸநம் முதலானவை அருளிச்செய்துள்ளார் என்பதாக பூர்வர்கள் அருளிய இவரது வைப₄வநூல்களில் காணப்படுகிறது. வரவரமுனி ஶதகம் அஷ்டஶ்லோகி வ்யாக்₂யா, ஸ்ரீவேங்கடேஶ ஸுப்ரப₄ாதம், ப்ரபத்தி மங்களா ஶாஸநங்கள் அச்சில் வந்துள்ளன.)*

63. ஜீயர் திருப்பேரனாரான ஜீயர் நாயனார் உபதே₃ஶ ரத்னமாலை ஶ்லோகம், நக்ஷத்ரமாலை அருளிச்செய்தார்.

64. கந்தாடையண்ணன் திருப்பேரனார், ஸ்ரீபராங்குச பஞ்சவிம்ஶதி முதல் அருளிச்செய்தார்.

65. அனந்தாண்பிள்ளை அநந்தாசார்யர் ஸ்ரீவசநபூ₄ஷண மீமாம்ஸை அருளிச்செய்தார்.

66. வானமாமலை ஜீயர் திருவாராத₄னக்ரமம் அருளிச்செய்தார். *(மணவாளமாமுனிகள் ஏற்படுத்திய அஷ்டதி₃க்க₃ஜங்கள் திருநாமம். 1.வானமாலை ஜீயர், 2. திருவேங்கட ஜீயர், 3.பரவஸ்து பட்டர்பிரான் ஜீயர், 4. கோயில் கந்தாடையண்ணன், 5. எறும்பியப்பா, 6. அப்பிள்ளை, 7. அப்புள்ளார், 8. ப்ரதிவாதி₃ப₄யங்கரம் அண்ணா என்பது.)*

67. ஞானத்₃ருஷ்டி அழகப்பங்கார், ஸாரார்த்த₂ரத்னமாலை, ஈட்டுக்குப் பாட்டுத்தோறும் உபந்யாஸம், நூறு திருவாய்மொழிக்கும் உபந்யாஸம், பத்துப்பத்துக்கும் உபந்யாஸம், உபோத்₃கா₄தோபந்யாஸம், நிக₃மந உபந்யாஸம், ஈட்டுப்ரமாணத்திரட்டுக்கு உரை, திருப்பாவை தாத்பர்யம், திருப்பாவைக்கருத்து, திருமந்த்ர யோஜனை, த்₃வய யோஜனை உபந்யாஸம், மூவாயிரத்துக்கும் ப்ரமாணத்திரட்டு, ரஹஸ்யத்ரய ஸ்ரீவசநபூ₄ஷண ஆசார்யஹ்ருத₃ய ப்ரமாணத்திரட்டு அருளிச்செய்தார். *(நம்பிள்ளை ஈடு அருளிச்செய்தாப்போலே)* இவர் அருளிச்செய்யக்கேட்டு கேட்டபடியே அப்பு முதலானோர் அரும்பதம் அருளிச்செய்தனர். 68 அப்புவரும்பதம், 69 பிள்ளை யரும்பதம், 70 அய்யங்கார் அரும்பதம், 71 ராமாநுஜய்யங்கார் அரும்பதம். இவ்வளவு முடியவும் (பூர்ணமாகவும்) 72 தொட்டை யரும்பதம் 3 பத்துக்கும், 73 அழகர் அரும்பதம் 3 பத்துக்கும் ''சக்கரத் தண்ணலே'' என்கிற பாட்டளவும். *(இக்காலம் அரும்பதகாலம் என்னலாம்.)*

68,69. அப்புவும், பிள்ளையும் மூவாயிரத்துக்கும் அரும்பதங்களும், தத்த்வத்ரய, ரஹஸ்யத்ரய, ஸ்ரீவசநபூ₄ஷண ஆசார்யஹ்ருத₃ய அரும்பதங்களும், அதுகளுக்கு உபந்யாஸங்களும் பரந்தபடிக்குக் கடி₂னவாக்யார்த்த₂ம் தீ₃பப்ரகாஶிகையரும்பதமும் அருளிச்செய்தனர்.

70. அவர் திருத்தமையனார் (திருத்தமப்பனார்?) ஆத்தான், குன்றத்தூர் அப்பனுக்கு ஸாதிக்க அவரும் அரும்பதம் அருளிச்செய்தார்.

71. அவர் திருத்தமப்பனார் பெரியராமாநுஜம்பிள்ளை கந்தாடை நாயனுக்கு ஸாதிக்க அவரும் ஸம்ஸ்க்ருத அரும்பதம் அருளிச் செய்தார்.

72. அழகப்பங்கார் குமாரர் பெரிய சடகோபாசாரியர் ஈடுப்ராஸங்கி₃க ப்ரமாணத்திரட்டு, திருக்கச்சி நம்பிசரிதம் முதல் அருளிச்செய்தார்.

73. ஆத்தான் திருவடிகளிலே ஆஶ்ரயித்த வேத$_3$ாந்தி ராமாநுஜ ஜீயர் திவ்யஸூரி ப்ரப$_4$ாவதீ$_3$பிகை முதல் அருளிச்செய்தார்.

74. திருக்குடந்தையண்ணா கடி$_2$னப்ரதீ$_3$பிகை அருளிச்செய்தார்.

75. அவர்குமாரர் ஶட$_2$கோபாசார்யர் அருஞ்சொல்விளக்கமும், மூவாயிரம் அருஞ்சொல் விளக்கமும் அருளிச்செய்தார்.

76. அரும்பதம் அப்பு குமாரர் அழகப்பங்கார், ப்ரதிபத$_3$ம் உபந்யாஸங்கள் அருளிச்செய்தார்.

77. பிள்ளைலோகார்ய ஜீயர், உபதே$_3$ஶரத்நமாலை வ்யாக்$_2$யா, ஸ்ரீஶைலேஶேத்யாதி$_3$ தனியன்களுக்கு வ்யாக்$_2$யா, செய்யதாமரைத் தாளிணை வ்யாக்$_2$யா, ஏகஶ்லோகி வ்யாக்$_2$யா, பராங்குஶ தி$_3$வ்யசரிதம், பரகால தி$_3$வ்யசரிதம், ராமாநுஜ தி$_3$வ்யசரிதம், யதீந்த்$_3$ரப்ரவண ப்ரப$_4$ாவம், தி$_3$வ்யப்ரப$_3$ந்த$_4$ாநுஸந்த$_4$ானம், ஸத்ஸம்ப்ரத$_3$ாயமாலை ஸகலப்ரமாண ஸங்க்$_3$ரஹம் 10000 ராமாநுஜரஹஸ்யத்ரயம், வாக்ய கு$_3$ருபரம்பரைக்கு வ்யாக்$_2$யாநம் அருளிச்செய்தார். *(இவர் ராமாநுஜ நூற்றந்தாதி வ்யாக்$_2$யாநமும் அருளிச்செய்தார். ஸ்ரீவைஷ்ணவ ஸமாயாசார நிஷ்கர்ஷமும் இவர் அருளிச்செய்ய இவரது சிஷ்யரால் ஏடுபடுத்தப்பட்டது).*

78. சோளங்கிபுரம் தொட்டயாசார்யர் சண்ட$_3$மாருதம், பாராஶர்ய விஜயம், பஞ்ச விஜயமும் அருளிச்செய்தார்.

79. ஸ்ரீநிவாஸ ஶட$_2$கோப ஜீயர் வேத$_3$ாந்த பரிப$_4$ாஷை முதல் அருளிச் செய்தார்.

80. தொட்டயாசார்யரிருவரும், தூப்பில் பிள்ளை க்ருதிகளுக்கு ஸம்ஸ்க்ருதமாயும் மணிப்ரவாளமாயும் வ்யாக்$_2$யாநங்கள், ப$_4$ாஷ்ய தீ$_3$பிகை, யதீந்த்$_3$ரமததீ$_3$பிகை, ஸ்ரீப$_4$ாஷ்ய உபந்யாஸம் முதல்

அருளிச்செய்தார் (ஸ்ரீவேதா3ந்த தே3ஶிகர் வைப4வபரமான ஆசார்யவிஜய சம்பூ தொட்டயாசார்யர் அருளிச்செய்தது. இவ்விடத்தில் தூப்பில் பிள்ளை என்று ப்ரஸித்3த4ரான வேதா3ந்த தே3ஶிகர் நூற்றுக்கணக்கான க்3ரந்த2ங்கள் ஸம்க்ருதம் தமிழ் இருமொழிகளிலும் அருளிச்செய்துள்ளார். ஸ்ரீ.உ.வே. ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி மகாவித்வான் காஞ்சீ ப்ர.ப.அண்ணங்கராசார்ய ஸ்வாமி தேஶிக க்3ரந்த2மாலா என்ற பெயரில் தேஶிகர் க்ருதிகளையெல்லாம் ஒருசேர அச்சிட்டு வெளியிட்டுள்ளார். வேதாந்த தேஶிகர் திருக்குமாரர் நயினாராசார்யர் அதி4கரண ஸாராவலீ வ்யாக்2யாநம் முதல் அருளிச் செய்தார்.)

81. ஷஷ்டி ப்ரப3ந்த4 நிர்மாதாவான ஸ்ரீமந்நாராயண வண்சடகோபஜீயர், புருஷகார மீமாம்ஸை, ஸந்த்4யாவந்த3ன பா4ஷ்யம், ரஹஸ்யத்ரய ஜீவாது முதல் அருளிச்செய்தார். (இவர் ஸ்ரீஅஹோபில மட2ஸ்தாபகரான ஆதிவண் சடகோப ஜீயரது சிஷ்யர், மடத்தின் இரண்டாவது பட்டத்தை அலங்கரித்தவர்.)

82. கோயிலண்ணன் வரத3நாராயணர் ஜீயர் ஸத்3குரு தீ3பிகாவலி முதலானவை அருளிச்செய்தார்.

83. எறும்பியப்பா திருவம்ஶ்யரான அப்பாவிப்பிள்ளை ரஹஸ்யம், அஷ்டாத3ஶ ஸம்வாத3ம் அருளிச்செய்தார்.

84. பட்டம் தாதய்யங்கார் வம்ஶ்யரான நம்பாக்கம் ஐயன் புருஷஸூக்த பா4ஷ்யம், ஸம்ப்ரதா3ய சந்த்3ரிகையும் அருளிச்செய்தார்.

85. தத்3வம்ஶ்யரான பா3லஸரஸ்வதி ரஹஸ்யத்ரயதீ3பிகை முதல் அருளிச்செத்யார்.

86. அவர் குமாரர் ராமாநுஜ தே3ஶிகன் ஸ்ரீபா4ஷ்யாதி4கரணோபந்யாஸம், ஸ்ரீபராங்குஶபாது3காபஞ்சாஶத், கோ3தா3ஸ்துதி, வரவரமுநிபாது3கா வைப4வம், ஆசார்யாள் த்4யானங்கள், ஜாக்3ருஹி, ஆழ்வார் அந்தாதி,

மண்டப சதுஷ்டயஸ்தோத்ரம் முதல் அருளிச்செய்தார். (மண்டப சதுஷ்டயமாவது - புஷ்ப, த்யாக$_3$ ,பே$_4$ாக$_3$ ,ஜ்ஞான மண்டபம்; புஷ்ப மண்டபம் திருமலை, த்யாக$_3$ மண்டபம் பெருமாள் கோவில், பே$_4$ாக$_3$மண்டபம் திருவரங்கம் பெரியகோவில், ஜ்ஞானமண்டபம் (மேலக்கோட்டை) திருநாராயணபுரம்).

87. அவர் திருத்தம்பியார் ஸ்ரீகிருஷ்ண தே$_3$ஶிகன், ரஹஸ்யத்ரயார்த்த$_4$ாநு ஸந்த$_4$ாநஶ்லோகங்கள் ரஹஸ்யத்ரயஸித்$_3$தா$_4$ந்தம், ரஹஸ்யத்ரய ஸங்க்$_3$ரஹவிவரணம் ரஹஸ்யத்ரயதீபிகை, ஒருநாயகோபந்யாஸம் திருவாய்மொழி ஸங்க்$_3$ரஹம் முதல் அருளிச்செய்தார்.

88. ஸ்ரீஶைல மூன்று ஜீயர்களும் எறும்பியிலப்பாவும்....

**முடிவுரை:**

இத்துடன் இந்நூல் பூர்த்தியாகாமல் முடிவடைகிறது. இதன் மூல ஓலைப் பிரதியிலும் இவ்வளவேயிருக்கவேணும். அல்லது பூர்த்தியாய் பிரதி எழுதுவதற்கு முன் அந்த ப்ரதி திருப்பிக் கொடுக்கப்பட்டிக்கும். ப$_3$ாலஸரஸ்வதி என்பவர் இன்றைக்கு சுமார் 200 வருஷங்களுக்கு முற்பட்டவராகலாம். ஸுப்ரஸித்$_3$த$_4$ரான திருமழிசை அண்ணாவப்பங்கார் ஸ்வாமி இவரது புநரவதாரம் என்பர். இந்த நூலில் மற்றும் பலரின் திருநாமங்களும், பல க்$_3$ரந்த$_2$ங்களின் பெயர்களும் விடுபட்டிருக்கிறது. இன்றுவரை க்$_3$ரந்த$_2$நிர்மாணம் செய்துவருமவர்களின் திருநாமங்களும் க்$_3$ரந்த$_2$ங்களின் பெயர்களும் இதன் தொடர்ச்சியாகத் தெரிந்தவளவு சேர்த்துக் கொள்ளவேணும். இந்நூலின் முயற்சி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதா$_3$யத்தில் ஆசார்யர்கள் ஸம்ஸ்க்ருதமொழியிலும் தமிழ்மொழியிலும் எவ்வளவு க்$_3$ரந்த$_2$ங்கள் எவ்வளவு பிரிவுகளில் செய்துள்ளனர். இன்றுவரை எவ்வளவு செய்துவருகின்றனர். ஸ்ரீவைஷ்ணவ வளர்ச்சி எவ்வளவுவரை ஏற்றமாயுள்ளது இவைபோன்றவைகளை ஆராய்ந்தின்புறுவதற்கு ஒரு தூண்டுகோலாக இருக்கிறது. இந்த க்$_3$ரந்த$_2$ங்களை யெல்லாம் தேடி ஆராய்ந்து கிடைக்குமவைகளை அச்சிட்டு வெளியிடுவது லோகோபகாரமானவொரு தொண்டாகும்.

குறிப்புகளுடன் கூடிய ஆசார்யர்கள் அருளிச்செய்த பட்டோலை முற்றிற்று.